# மண்முனை தென்மேற்குப் பிரதேச அம்மன் சடங்கு முறைகள்.

LIBRARY
16 AUG 2012
Eastern University, Sri Lanka.

திரு.கற்பூரப்போடி புவனசிங்கராஜா

பதிவிலக்கம் : EU/PGS/MA(T)23

சுட்டெண் : MA(T)23

முதுகலைமாணி இறுதித்தேர்வில் ஒருபகுதியினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் மொழித்துறைக்கு இவ்வாய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கப்படுகிறது.

MA19
Thesis
Library - EUSL

மொழித்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

2005/2006

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | VIII |
| நன்றியுரை | X |
| ஆய்வுச்சுருக்கம் | XI |

## இயல் I

## மண்முனை தென்மேற்குப் பிரதேசம் ஓர் அறிமுகம்

| | | |
|---|---|---|
| 1.1. | அமைவிடமும் இயற்கைச் சூழலும் | 01 |
| 1.2. | வரலாறும் பரிபாலன முறைகளும் | 02 |
| 1.3. | மக்களது வாழ்க்கை முறைகள் | 06 |
| 1.3.1. | தொழில் | 06 |
| 1.3.2. | கல்வியும் விளையாட்டும் | 06 |
| 1.3.3. | பண்பாட்டு அம்சங்கள் | 06 |
| 1.3.4. | மொழியும் சமயமும் கலைகளும் | 08 |

## இயல் II

## சிறு தெய்வ வழிபாடுகள் 11

| | | |
|---|---|---|
| 2.1. | இலங்கையில் சிறு தெய்வ வழிபாடுகள் | 14 |
| 2.2. | மட்டக்களப்பில் சிறு தெய்வ வழிபாடுகள் | 16 |
| 2.3. | மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாடுகள். | 17 |

## இயல் III

## கண்ணகியம்மன் கோவில்களும் சடங்கு முறைகளும் 21

| | | |
|---|---|---|
| 3.1. | கண்ணகி வழிபாட்டின் தோற்றம் | 24 |
| 3.2. | மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு | 27 |
| 3.3. | மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் கண்ணகி வழிபாட்டின் ஆரம்பம் | 28 |
| 3.4. | மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் கண்ணகியம்மன் சடங்கு முறைகள் | 29 |

## இயல் IV

## மாரியம்மன் கோவில்களும் சடங்கு முறைகளும்

| | | |
|---|---|---|
| 4.1. | மாரியம்மன் தோன்றிய வரலாறு | 37 |
| 4.2. | மண்முனை தென்மேற்குப் (பட்டிப்பளைப்) பிரதேசத்தில் மாரியம்மன் வழிபாட்டின் வருகை | 40 |

4.3. மண்முனை தென்மேற்குப பிரதேசத்தில் மாரியம்மன் சடங்கு முறைகள் 41

## இயல் V

காளியம்மன் கோவில்களும் சடங்கு முறைகளும்

5.1. காளியம்மன் தோன்றிய வரலாறு 55
5.2. மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் காளியம்மன் வழிபாட்டின் ஆரம்பம் 58

5.3. மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் காளியம்மன் சடங்கு முறைகள் 59

## இயல் VI

அம்மன் சடங்குகளும் மக்கள் வாழ்வில் அவை பெறும் முக்கியத்துவமும் 63

## இயல் VII

தொகுப்புரை 67

பின்னிணைப்புக்கள்

1.உசாத்துணை நூல் பட்டியல் 69
2.தகவல் தந்தவர்கள் 70
3.அம்மன் பாடல்கள் 71
(அ) மாரியம்மன் உற்பத்தி அகவல்
(ஆ) மாரியம்மன் காவியம்
(இ) மாரியம்மன் சின்னக்காவியம்
(ஈ) கண்ணகி அம்மன் கலியாணக்கால் சுற்றுக்காவியம்
(உ) கண்ணகி அம்மன் குளுத்திப் பாடல்கள்
(ஊ) கண்ணகி அம்மன் வழக்குரை காவியம்
(எ) கண்ணகி அம்மன் மழைக்காவியம

4. இலங்கையின் சில அம்மன் ஆலயங்கள். 111

# முன்னுரை

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும், நம்பிக்கைகளையும், இலக்கியங்களையும் அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயலே நாட்டுப்புறவியல் என சு.சக்திவேல் அவர்கள் குறிப்பிடுகின்றார். நாட்டுப்புறவியலை நாட்டார் இயல் என்றும் கூறுவர். நாட்டார் இயலின் நாட்டுப்புறத்தெய்வங்கள், திருவிழாக்கள் போன்ற சமய நம்பிக்கைகள் பற்றிய விடயங்களும் இடம்பெறுகின்றன. இவற்றில் அம்மன் வழிபாடுகள் பற்றிய விடயங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்விடயங்களைப்பற்றி ஆய்வு செய்வது அவசியமாகின்றது.

## 1.ஆய்வின் தேவை:-

நாட்டார் இயலிலே பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு ஆய்வாளர்களால் பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன. எனினும் மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தின் அம்மன் சடங்கு முறைகள் பற்றிய ஆய்வு இதுவரை எவராலும் மேற்கொள்ளப்படவில்லை. இப்பின்னணியில் இப்பிரதேசத்தை மையமாகக் கொண்ட அம்மன் சடங்கு முறைகள் பற்றிய ஆய்வொன்று அவசிய தேவையாகின்றது.

## 2.ஆய்வின் நோக்கம்:-

மேற்குறிப்பிட்ட தேவைக்கிணங்க மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தின் அம்மன் சடங்கு முறைகள் பற்றி அறிந்து கொள்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவைதவிர எதிர்காலத்தில் இந்த மரபு வழக்காறுகள் பேணப்படுவதுடன் இவை பாதுகாக்கப்படவும் வேண்டும்.

## 3.ஆய்வுப் பிரதேசம்:-

இந்த ஆய்வுக்குரிய இடவெல்லையானது போரதீவுப்பற்றுப் பிரதேசத்திற்கும், மண்முனை மேற்குப் பிரதேசத்திற்கும் இடையே மண்முனை தென்மேற்காக அமைந்து காணப்படும் பகுதியே இவ்வாய்வுப் பிரதேசமாகும்.

## 4.ஆய்வுக்கான ஆதாரங்கள்:-

1. மூலாதாரம் - கள ஆய்வு

   ஐ. நேர்காணல் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்.

   ஐஐ. கலந்துரையாடல்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதகவல்கள்.

   ஐஐஐ.வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தகவல்கள்.

2. துணை ஆதாரங்கள்

   - நாட்டார் ஆய்வு நூல்கள்
   - அம்மன் சடங்கு பற்றிய நூல்கள்
   - அம்மன் பாடல் கொண்ட நூல்கள்

## 5.ஆய்வுப் பகுப்பு:-

இவ்வாய்வுக்கட்டுரையானது ஏழு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை:

இயல் ஒன்று :- மண்முனைத் தென்மேற்குப் பிரதேசம் ஓர் அறிமுகம்.

இயல் இரண்டு :- சிறு தெய்வ வழிபாடுகள்

இயல் மூன்று :- கண்ணகியம்மன் கோவில்களும் சடங்கு முறைகளும்

இயல் நான்கு :- மாரியம்மன் கோவில்களும் சடங்கு முறைகளும்

இயல் ஐந்து :- காளியம்மன் கோவில்களும் சடங்கு முறைகளும்

இயல் ஆறு :- அம்மன் சடங்குகளும் மக்கள் வாழ்வில் அவை பெறும் முக்கியத்துவமும்

இயல் ஏழு :- தொகுப்புரை

## 6.ஆய்வின் போது ஏற்பட்ட பிரச்சினைகள் :-

- மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தின் பிரதான தொழில் விவசாயம் ஆகையால் தகவல் தருகின்றவர்களும் விவசாயம் செய்பவர்கள் ஆவர். இதனால் அவர்களை சந்திப்பதில் பல சிரமங்கள் ஏற்பட்டன.
- பூசாரிமார்கள் ஏட்டில் இருக்கும் சில முக்கிய விடயங்களை அச்சுருவாக்கத்திற்கு கொடுக்க விரும்பாதிருந்தமை.
- தங்களால் கொடுக்கப்படும் விடயங்களுக்கு சில சலுகைகளை எதிர்பார்த்தமை.
- சடங்குகளுக்குரிய பூசை முறைகளை மட்டும் கூறினார்களே அன்றி, அதற்குரிய மந்திரங்களையும், அதற்குரிய இரகசியங்களை கூறவிரும்பாமை.
- சடங்கு முறைகள் பற்றிய பத்தாசி (பத்ததி) விதி முறைகள் தங்களது குடும்ப பரம்பரை ஊடாக மட்டுமே பேணப்பட வேண்டும் என்ற எண்ணங்கள் அவர்களது தகவல்கள் ஊடாக மறைமுகமாக வெளிப்பட்டமை.